EVERWIN VIDHYASHRAM

STD: VIII TAMIL - L2 Term - I

இயல் - 1

கவிதைப்பேழை : 1. தமிழ்மொழி வாழ்த்து

2. தமிழ்மொழி மரபு

உரைநடை உலகம் : தமிழ்வரி வடிவ வளர்ச்சி

## கவிதைப்பேழை: 1. தமிழ்மொழி வாழ்த்து

**I. பொருள் கூறுக:**

1. நிரந்தரம் - காலம் முழுமையும்
2. வண்மொழி - வளமிக்கமொழி
3. வைப்பு - நிலப்பகுதி
4. இசை - புகழ்
5. தொல்லை - பழமை, துன்பம்

**II. பிரித்து எழுதுக:**

1. வானமளந்தது - வானம் + அளந்தது
2. என்றென்றும் - என்றும் + என்றும்
3. வண்மொழி - வண்மை + மொழி
4. வானமறிந்த - வானம் + அறிந்த

**III. குறுவினாக்கள்:**

1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?

ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ்கொண்டு வாழ்கிறது தமிழ்மொழி.

2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து தமிழ்மொழி வளர்கிறது.

3. தமிழ்நாடு எவ்வாறு ஒளிர வேண்டும் என்று பாரதியார் கூறியுள்ளார்?

பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கி தமிழ்நாடு ஒளிரவேண்டும் என்று பாரதியார் கூறியுள்ளார்.

4. பாரதிதாசன் பாரதியாரை எவ்வாறெல்லாம் புகழ்ந்துள்ளார்?

* சிந்துக்குத் தந்தை * செந்தமிழ்த் தேனீ

* புதிய அறம் பாடவந்த அறிஞன் * மறம் பாடவந்த மறவன்

என்று பாரதிதாசன் பாரதியாரைப் புகழ்ந்துள்ளார்.

## கவிதைப்பேழை: 2. தமிழ்மொழி மரபு

**I. பொருள் கூறுக:**

1. விசும்பு - வானம்
2. மயக்கம் - கலவை
3. மரபு - வழக்கம்
4. திரிதல் - மாறுபடுதல்
5. செய்யுள் - பாட்டு
6. வழாஅமை - தவறாமை

**II. பிரித்து எழுதுக:**

1. இருதிணை - இரு + திணை
2. ஐம்பால் - ஐந்து + பால்
3. தமிழமொழி - தமிழ் + மொழி
4. மரபுநிலை - மரபு + நிலை

**III. குறுவினாக்கள்:**

1. உலகம் எவற்றால் ஆனது?

உலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐம்பூதங்களால் ஆனது.

2. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

* இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும். இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்த வேண்டும்.

* இம்மரபு மாறினால் செய்யுளில் பொருள் மாறிவிடும்.

3. தமிழ்மொழியின் மரபு எது?

உலகத்துப் பொருள்களை இருதிணைகளாகவும், ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு ஆகும்.

## உரைநடை உலகம்: தமிழ் வரிவடிவ வளர்ச்சி

**I. பிரித்து எழுதுக:**

1. பேச்சுமொழி - பேச்சு + மொழி
2. ஓவிய எழுத்து - ஓவியம் + எழுத்து
3. செப்பேடு - செப்பு + ஏடு
4. அச்சுக்கலை - அச்சு + கலை
5. தமிழெழுத்து - தமிழ் + எழுத்து

**II. சேர்த்து எழுதுக:**

1. கண் + எழுத்து - கண்ணெழுத்து
2. அழகு + உணர்ச்சி - அழகுணர்ச்சி
3. ஓலை + சுவடி - ஓலைச்சுவடி
4. இணை + கொம்பு - இணைக்கொம்பு
5. வரி + வடிவம் - வரிவடிவம்

**III. குறுவினாக்கள்:**

1. ஓவிய எழுத்து என்றால் என்ன?

எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்று அழைத்தனர்.

2. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?

ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

3. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

* 'எகர' 'ஒகர' வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை களைந்தார்.

* 'எ' என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை, நெடிலாகவும், ஒ என்னும் எழுத்திற்கு சுழி இட்டு 'ஓ' என்னும் எழுத்தாவும் உருவாக்கினார்.

4. தமிழ் எழுத்துகளின் பழைய வரி வழவங்களை எங்கு காணலாம்?

தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களை கோவில்களிலுள்ள கருங்கல், சுவர்கள், செப்பேடுகள் போன்றவற்றில் காணலாம்.

5. கண்ணெழுத்துகள் என்றால் என்ன?

கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் எனப்படும்.

6. ஓலைச் சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?

* ஓலைகளில் நேர்க்கோடுகளை எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகள் பயன்படுத்தினர்.

* ஓலைகளில் புள்ளி எழுத்துகள் எழுதும் போது சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

## இயல் - 2

| | | |
|---|---|---|
| கவிதைப்பேழை | : | 1. ஓடை |
| | | 2. கோணக் காத்துப் பாட்டு |
| உரைநடை உலகம் | : | நிலம் பொது |

### கவிதைப்பேழை: 1. ஓடை

**I. பொருள் தருக:**

1. முழவு - இசைக்கருவி
2. ஈரம் - இரக்கம்
3. நாணம் - வெட்கம்
4. செஞ்சொல் - திருந்திய சொல்
5. தூண்டுதல் - ஆர்வம் கொள்ளுதல்

**II. பிரித்து எழுதுக:**

1. நீளுழைப்பு - நீள் + உழைப்பு
2. சீருக்கேற்ப - சீருக்கு + ஏற்ப
3. நீரோடை - நீர் + ஓடை

**III. குறுவினாக்கள்:**

1. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

கற்களில் உருண்டும், தவழ்ந்தும், நெளிந்தும் செல்லும் ஓடையில் 'சலசல' என்று ஒலி எழுப்பியபடி ஓடை ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்.

2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் கூறுகிறார்?

சிறந்த சொற்களைப் பேசும் பெண்கள் பாடும் வள்ளைப்பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவது போல் ஒலி எழுப்புகிறது என ஓடை எழுப்பும் ஒலிக்கு உவமையாக வாணிதாசன் கூறுகிறார்.

### கவிதைப்பேழை: 2. கோணக் காத்துப் பாட்டு

**I. பொருள் தருக:**

1. முகில் - மேகம்
2. சேகரம் - கூட்டம்
3. வின்னம் - சேதம்

4 வாகு - சரியாக

5. மெத்த - மிகவும்

**II. பிரித்து எழுதுக:**

1. விழுந்ததங்கே - விழுந்தது + அங்கே

2. பருத்தியெல்லாம் - பருத்தி + எல்லாம்

**III. சேர்த்து எழுதுக:**

1. நாடு + எல்லாம் - நாடெல்லாம்

2. சரிந்தது + அங்கே - சரிந்ததங்கே

3. வளர்ந்து + ஓங்கும் - வளர்ந்தோங்கும்

**IV. குறுவினாக்கள்:**

1. கப்பல் கவிழ்ந்தற்குக் காரணமாகக் கோணக் காத்துப் பாட்டுக் கூறுவது யாது?

கடலில் விரைந்து வந்த கப்பல் எமனைப் போல வந்த பெருமழையாலும், சுழல் காற்றினாலும் கவிழ்ந்தது.

2. புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?

புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னா பின்னமாக ஒடிந்து விழுந்தன.

3. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

இறைவனின் பெருமையைக் கூறும் சித்தர்கள் வாழும் கொல்லிமலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

## உரைநடை உலகம்: நிலம் பொது

**I. பொருள் தருக:**

1. நறுமணம் - வாசனை

2. குருதி - இரத்தம்

3. இன்றியமையாமை - முக்கியத்துவம்

**II. பிரித்து எழுதுக:**

1. இன்னோசை - இனிய + ஓசை

2. பாலூறும் - பால் + ஊறும்

3. கடற்கரை - கடல் + கறை

4. தண்ணீரன்று - தண்ணீர் + அன்று

**III. சேர்த்து எழுதுக:**

1. பனி + துளி - பனித்துளி

2. மறப்பது + இல்லை - மறப்பதில்லை

3. பெருமை + தலைவர் - பெருந்தலைவர்

4. வாழ்வு +இயல் - வாழ்வியல்

**IV. குறுவினாக்கள்:**

1. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

காற்றின் தூய்மையும், நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. அவற்றை விலை கொடுத்து வாங்க இயலாதவை என சியாட்டல் கூறுகிறார்.

2. நிலத்திற்கும், செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

செவ்விந்தியர்கள் அமைதியான குளத்தின் முகத்தை முகந்து வரும் தென்றலின் இன்னோசையையும், நடுப்பகலில் பெய்யும் மழையால் எழும் மண்வாசனையையும் தேவதாரு மரத்திலிருந்து பறக்கும் இலைகளின் மணத்தையும் நுகர்பவர்கள். இதுவே நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு ஆகும்.

3. எதனைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?

இந்நிலத்தில் உள்ள எருமைகள் கொல்லப்படுவதையும், எங்கு பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதையும், தொன்மையான மலைகளை மறைத்து தொலைபேசி கம்பிகள் பெருகி வருவதையும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று சியாட்டல் கூறுகிறார்.

## இயல் - 3

கவிதைப்பேழை : 1. நோயும் மருந்தும்

2. வருமுன் காப்போம்

உரைநடை உலகம் : தமிழர் மருத்துவம்

### கவிதைப் பேழை: 1. நோயும் மருந்தும்

**I. பிரித்து எழுதுக:**

1. நற்காட்சி - நன்மை + காட்சி

2. நல்லொழுக்கம் - நன்மை + ஒழுக்கம்

3. இன்பமுற்றே - இன்பம் + உற்றே

## II. குறுவினாக்கள்:

1. நோயின் மூன்று வகைகள் யாவை?

* மருந்தினால் நீங்கும் நோய்கள்.
* தீராத தன்மையுடைய நோய்கள்
* வெளித் தோற்றத்தில் தீர்ந்தன போலத் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தரும் நோய்கள் என நோய் மூன்று வகைப்படும்.

2. நீலகேசியில் பிறவித் துன்பத்தை தீர்க்கும் மருத்துகளாகக் கூறப்படுவன யாவை?

1. நல்லறிவு 2. நற்காட்சி 3. நல்லொழுக்கம் ஆகிய மூன்றும் பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்பட்டுள்ளன.

### கவிதைப் பேதை: 2. வருமுன் காப்போம்

## I. பொருள் தருக:

1. உலாவி - நடந்து
2. காலன் - எமன்

## II. குறுவினாக்கள்:

1. நம்மை நோய் அணுகாமல் காப்பவை யாவை?

* காலையும் மாலையும் நடைப்பயிற்சி செய்தல்.
* நல்ல காற்றைச் சுவாசித்தல் ஆகியவை நம்மை நோய் அணுகாமல் காப்பவை ஆகும்.

2. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமையாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?

* உணவை அளவாக உண்ணாமல் அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறும்.
* நோய்வாய்ப் பட நேரிடும் எனக் கவிமணிக் குறிப்பிடுகின்றார்.

### உரைநடை உலகம்: தமிழர் மருந்துவம்

## I. குறுவினாக்கள்:

1. மருத்துவம் எப்போது தொடங்கியது?

* தொடக்கக்காலத்தில் மனிதனுக்கு நோய் ஏற்பட்டபோது இயற்கையான தாவரங்களையும், அருகில் கிடைத்த பொருள்களையும் பயன்படுத்தி நோயைத் தீர்க்க முயற்சி செய்தான்.
* தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி முதலியவற்றை மருந்தாக பயன்படுத்தினான். இவ்வாறு தான் மருத்துவம் தொடங்கியது.

2. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?

* தினமும் மூன்று கி. மீ நடைப்பயணம் செய்ய வேண்டும்.
* பதினைந்து நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி, ஏழுமணிநேர தூக்கம், மூன்று லிட்டர் தண்ணீர் போன்றவை மிகவும் அவசியம் ஆகும்.
* எங்கோ விளையும் ஆப்பிளைச் சாப்பிடுவதை விட நம் ஊரில் விளையும் பழங்களை காலை உணவுக்கு முன் சாப்பிட வேண்டும்.

இவ்வாறு நாள்தோறும் செய்து வந்தால் நல்வாழ்வு வாழலாம்.

3. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாக பயன்படுவன யாவை?

* தமிழர் மருத்துவத்தில் அருந்தும் உணவே அருமருந்தென கருதப்பட்டது.
* இயற்கையாக வளர்ந்த தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி போன்வற்றையும் மருந்தாக பயன்படுத்தினர்.
* உடலை வளப்படுத்தி உள்ளத்தைச் சீராக்கும் யோகம் முதலிய கலைகளையும் அறிந்திருந்தினர்.
* தழையால் குணமடையாத நோய்களுக்கு தாதுப் பொருட்களையும், உலோகத்தையும் மருந்தாக பயன்படுத்தினர்.

# இயல் - 4

கவிதைப்பேழை : 1. கல்வி அழகே அழகு
2. புத்தியைத் தீட்டு

உரைநடை உலகம் : பல்துறைக் கல்வி

### கவிதைப் பேழை: 1. கல்வி அழகே அழகு

## I. குறுவினா:

1. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை. அது போலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும்.

2. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் நான்கினை எழுதுக.

1. கந்தர்கலி வெண்பா 2. சகல கலாவல்லிமாலை
3. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

4. முத்துக் குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

3. நீதி நெறி விளக்கம் - பெயர்க்காரணம் தருக.

மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர்பெற்றது.

## கவிதைப் பேழை: 2. புத்தியைத் தீட்டு

### I. பொருள் தருக:

1. கண்ணியம் - நேர்மை
2. அகம்பாவம் - பெருமை

### II. குறுவினாக்கள்:

1. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?

மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றதாகும்.

2. பகைவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது?

உன்னை அழித்திட வந்த பகைவர்களாக இருந்தாலும் அவர்களிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

## உரைநடை உலகம்: பல்துறைக் கல்வி

### I. பிரித்து எழுதுக:

1. உடலோம்பல் - உடல் + ஓம்பல்
2. முதுமொழி - முதுமை + மொழி
3. ஏட்டுக்கல்வி - ஏடு + கல்வி
4. இவ்வுலகு - இ + உலக

### II. சேர்த்து எழுதுக:

1. தொழில் கல்வி - தொழிற்கல்வி
2. இயற்கை அன்னை - இயற்கையன்னை
3. நாடகம் கல்வி - நாடகக்கல்வி
4. புதுமை உயிர் - புத்துயிர்

### III. குறுவினாக்கள்:

1. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?

* இன்றைய நாளில் ஏட்டுக்கல்வியே கல்வி என்றும் ஒரு கொள்கை நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது.

* குறிப்பிடப் பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்படுகிறது.

* நாளடைவில் கல்விக்கும், வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது என இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு. வி. க. கூறுகின்றார்.

2. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

* தமிழ் மக்கள் அனைவரும் தாய்மொழி வாயிலாகக் கல்வி பயலுவதே சிறப்புடையது ஆகும்.

* முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும்.

* தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறக்கிறது.

3. திரு. வி. க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுவர்களின் பெயர்களை எழுதுக.

1. இளங்கோ 2. திருத்தக்கத்தேவர் 3. திருஞானசம்பந்தர்
4. ஆண்டாள் 5 சேக்கிழார் 6. கம்பர் 7. பரஞ்சோதி

முதலியோரைத் திரு. வி. க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுகின்றார்.